**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 10.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 47/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-5 |
| **சாட்சியின் பெயர்** | : | ராஜா |
| **தந்தை பெயர்** | : | பக்கிரிசாமி |
| **கிராமம்** | : | தாழைக்குடி |
| **தாலுக்கா** | : | திருவாரூர் |
| **தொழில்** | : | மளிகை கடை |
| **வயது** | : | 54 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடை நடத்தி வருகிறேன். நான் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். அ.சா-1 ரவியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 06.08.2022 ஆம் தேதி 5.00 மணி அளவில் அம்மையப்பன் கடை தெருவில் பொருட்கள் வாங்க வந்தேன்.

அப்போது அ.சா-1 ரவி என்பவர் ஜனபிரியா மளிகை கடை எதிராக அடிபட்டு இரத்தத்துடன் நின்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் 108 ஆம்புலன்ஸ்-ல் அ.சா-1-யை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்த்தேன். கொரடாச்சேரி போலீசார் வந்து சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். நடந்த விவரம் சொன்னேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை வந்து விசாரணை செய்தார். அவரிடம் நான் 3 நபர்கள் தன்னை தாக்கிவிட்டதாக அ.சா-1 என்னிடம் சொன்னார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா-1 ரவி என்பவர் எனது ஊர் காரர், உறவினர் மற்றும் ஜாதிக்காரர் என்றால் சரிதான். கடந்த 06.08.2022 ஆம் தேதி கொரானா காலம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் தமிழ்நாடு அரசு ஊரடங்கு போடப்பட்டு இருந்ததா என்றால் அந்த சமயத்தில் இல்லை. அ.சா-1 -யை யார் தாக்கியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். எந்த காவல் துணை கண்காணிப்பாளர் என்னை வந்து விசாரணை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா-1 -யை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டு அமலில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அ.சா-1 என் உறவினர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.09.10 16:24:07 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.